# தொண்டன்

ஆரம்பம்: 1969–பெப்ரவரி




ஜூலை – 2008 சமய – சமூக – இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூலை - 2008

மலர்- 40 இதழ்- 06



**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

வயலற் சந்திரசேகரம்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்



**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


## உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| புனித வளனார்... | - | 02 |
| மரங்கள் தரும்... | - | 04 |
| புதிய பயணம் | - | 05 |
| இலக்கிய மஞ்சரி | - | 07 |
| ஒரு தரிசிப்பின்... | - | 08 |
| புதிய ஏற்பாட்டு... | - | 11 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு... | - | 12 |
| பழிவாங்குதல் | - | 14 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 16 |
| நெருப்புயர | - | 18 |
| இலங்கையில் சிங்கள... | - | 19 |
| கடுகுக் கதை... | - | 21 |
| அருட்பணியாளர் ஜெயந்தன்.. | - | 22 |
| கோபம் தவிர்த்தல்... | - | 25 |
| விவிலியம் கற்போம்... | - | 27 |
| அறிவை வளர்ப்போம்... | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486



விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

உலகிலே தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள், நியமிக்கப்படுகின்றார்கள், ஏன் முன்வருகின்றார்கள் என்றுகூடச் சொல்லலாம். இத்தகையத் தலைவர்களில் ஒன்று ஆன்மீகத் தலைவர்கள் அடுத்து ஏனைய தலைவர்கள். அதாவது கல்வி சார் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், ஏனைய துறைகளைச் சார்ந்தவர்கள்.

ஆன்மீகத் தலைமைத்துவத்தைத் தனிப்பட குறிப்பிட்டால் அது ஒரு அழைப்பெனவே மெச்சவேண்டும். ஆன்மீக வழியில் சமூகத்தை நல்வழிப் படுத்துவதென்பதை ஒரு தொழிலாகக் கருதிவிடவும் முடியாது, எடுத்துக்கொள்ளவும் கூடாது. ஆன்மீகப் பணியானது சேவை நோக்கோடு முன்னெடுக்கப் படுகின்ற மாபெரும் அழைப்பேயாகும். இப்பேற்பட்ட அழைப்பானது கடவுளிடம் இருந்து கிடைக்கின்றது.

இத்தகைய அழைத்தலை வரையறுத்துக் கூறுவோமானால் கடவுள் தனது திட்டத்தை மனிதரிடத்தில் தன்னோடு இணைந்து நிறைவேற்ற தனி மனிதனுக்கு விடுக்கின்ற வேண்டுகோளாகும். "எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில் நான் நம்பிக்கைக் குரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத் தொண்டில் அமர்த்தினார்" (1 திமொத் 1:12)

எமது ஆற்றல்களையோ, திறமைகளையோ, செல்வாக்கையோ அடிப்படையாகக் கருதி கடவுள் எம்மைப் பெயர் சொல்லி அழைப்பது கிடையாது. மாறாக எம்மிலுள்ள **விசுவாச உறுதியை** அடிப்படையாகக் கொண்டே எம்மை அழைக்கின்றார். இந்த விசுவாச உறுதியானது முதலில் கடவுளுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பது, அடுத்து தரப்பட்ட அழைத்தலுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதுமாகும். ஏனெனில் கடவுள் தான் மனிதனுக்குக் கொடுத்த அன்பிலே, வாக்குறுதிகளிலே பிரமாணிக்கமாய் இருக்கின்றார். "உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவர் இதைச் செய்வார்" (1 தெசலொ 5:24)


இவ்வாறு நோக்கும்போது ஆன்மீகத் தலைவர்களுக்கு தலையாய கடமைகள் பல உள்ளன. ஆகையால் ஆன்மீகத் தலைவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களிடத்தில் அதிக பொறுப்புணர்ச்சி மிக்கவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே வேளையில் ஆன்மீக வழிகாட்டியாக தங்களை அழைத்த இறைவனிடத்தில் பொறுப்பு மிக்கவர்களாகவும் இருக்கவேண்டும். ஆன்மீகத்தை வளர்க்கும், பரப்பும் பொறுப்பைப் பெற்றவர்கள் எவ்வாறு தங்கள் தலைமைத்துவத்தை ஆளுமைச் சிறப்பு மிக்கதாக அமைக்க முடியும் என்று நோக்கினால் பின்வரும் மூன்று முக்கிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

1. இறைவனோடு கொண்டுள்ள உறவில் (Relationship) உறுதியைப் பேணுதல்
2. இறை அழைத்தலில் (Calling) உறுதியைப் பேணுதல்
3. இறை பணியில் (Ministry) உறுதியைப் பேணுதல் என்பனவாகும்.

மேற்கூறப்பட்ட வகையில் நோக்கும்போது எமது மறைமாவட்டத்தில் கடந்த அறுபது ஆண்டுகளாய்க் குருமாணவர்களைப் பயிற்றுவிக்கும் புனித வளனார் சிறிய குருமடம் மிகச்சிறப்பான பங்கினை ஆற்றியுள்ளது. ஏன் ஆற்றி வருகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. சிறிய குருமட வாழ்க்கையானது, உருவாக்கல் பயிற்சியானது எப்போதும் சுமைகளோடு கூடிய சுகமேயாகும். சுமைகளெல்லாம் பிற்காலத்தில் முப்பதும், அறுபதும், நூறுமாகப் பலன் கொடுக்கும் போதுதான் மனசு நிறைவடைகிறது.

வைரவிழாவைக் காணும் புனித வளனார் சிறிய குருமட அதிபர், மாணவர்களுக்கு எமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதோடு முன்னை நாள் அதிபர்கள், ஆன்மீக இயக்குனர்கள், ஊழியர்கள் அனைவரையும் நன்றியுணர்வோடு எண்ணிப் பார்க்கின்றோம்.

– ஆசிரியர்



## இறைவாக்கு

"அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்"

(மத்: 9:37b,38)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வளனார் இளங்குருமடத்தின் வைரவிழா

திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் குருத்துவ உருவாக்கத்தில் அடித்தளமிடும் புனித வளனார் இளங்குருமடம் தனது அறுபதாவது ஆண்டு நிறைந்த வைரவிழாவைக் கடந்த 24.06.2008 அன்று கொண்டாடியது.

1948ம் ஆண்டு மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட இக்குருமடம் ஐம்பதுகளின் இறுதியில் தொடக்கம் எண்பதுகளின் ஆரம்பம் வரை ஏறத்தாள 25 ஆண்டுகள் திருகோணமலையில் இயங்கி வந்தது; அதன்பின் மட்டக்களப்பில் இயங்கிவருகிறது. ஏறத்தாள 70 குருக்கள் இங்கு பயிற்சிபெற்று உருவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மறைமாவட்டம் தன்னுடைய தேவைகளுக்கு சுதேசக் குருக்களை உருவாக்கும் முயற்சியில் புனித வளனார் குருமடம் பெரும் பங்காற்றிவருகிறது


வைரவிழாவை ஒட்டி இடம்பெற்ற நிகழ்வுகளில் அன்று காலை ஆண்டுதோறும் இடம்பெறுவதுபோல் குருக்களுக்கும் குருமட மாணவர்களுக்கும் மென்பந்து கிறிக்கற் போட்டி நடைபெற்றது. அதில் குருமட மாணவர்கள் வெற்றியீட்டினர். அதனைத் தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் துணை ஆயர் பேரருள்தந்தை பொன்னையா யோசப் ஆண்டகை அவர்களின் தலைமையில் குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அதன்பின் மதியவிருந்தைத் தொடர்ந்து குருமட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்நிகழ்வின் சிறப்பம்சமாக ஆயர்த்துவப் பணியில் வெள்ளிவிழாக் கண்ட ஆயரும் மற்றும் புதிய துணை ஆயரும் பொன்னாடை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







போர்த்தி, பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள். துணை ஆயர் பொன்னையா யோசப் அவர்கள் இக்குருமடத்திலேயே பயின்று உருவானவர் என்பதோடு, குருமடத்தின் இயக்குனராகவும் பணிபுரிந்தவர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மேலும் குருமடத்தின் 60வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'வளனார் வழிதனிலே' என்னும் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர்கள், பணியாளர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

– சுதா –

# ஒப்புரவு அருட்சாதனம்

போலந்து நாட்டு மக்கள் ஒப்புரவு அருட்சாதனத்தை பாவங்களை அறிக்கையிடும் ஒரு சாதாரண சடங்காக நோக்காமல் அதனை அருள் பாய்ந்து வரும் ஒரு முழுமையான அடையாளமாக ஏற்றுப் பயன் பெறுவதாக அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. போலந்து நாட்டின் வாரப் பத்திரிகை ஒன்று நடத்திய ஆய்வுகளின்படி போலந்து நாட்டு மக்கள் தொகையில் 90 விழுக்காடாக இருக்கும் கத்தோலிக்கருள் 75 விழுக்காட்டினர் நல்ல சமயப் பற்றுடையவர்களாக உள்ளார்கள் எனவும் 51.7 விழுக்காட்டினர் அடிக்கடி பாவ மன்னிப்புப் பெறுவதையும் ஒப்புரவு அருட்சாதனம் அவர்களுடைய வாழ்வில் நல்ல குணநலன்களை வடிவமைப்பதில் பெருமளவில் உதவுவதாகவும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள் தரும் கனிகள்

கண்கவர்ந்த நிலைகளிலே செழிப்புடனே
வளங்கொண்ட மண்ணிலொரு மரமொன்று
கனிநிறைந்த மரமதனைக் காணும்போது
களிப்படையும் முகங்களெல்லாம் வியப்புடனே
நிறைந்தகனிக் கிளைகளினால் வழிந்து-அங்கே
வளைந்துவிட்ட மரமாகிச் சிரிக்கும்பழம்
குலுங்கியுள்ள நிலைகண்டு நோக்கும்கண்கள்
வியந்து-அதன் அழகினிலே விழித்துநிற்கும்

கனிநிறைந்த நிலைகளினால் கண்களுடன்
களிப்படைந்து மனங்களுமே வியப்படைய
பசிகொண்ட வயிறுஒன்று பார்த்தகாட்சி
பசிதீர்க்கப் பழம்பறிக்கும் எண்ணம்வேறு
சுவைத்துப்பசி தீர்ப்பதற்கு முனைகையிலே
தடுத்திடுமே குரலதனால் உடல்நடுங்கி
தடுமாறி எழும்போது கேட்டகுரல்
'நச்சுக்கனி' என்றதுமே நடுங்கியதே

நச்சுக்கனி இதைநாவால் நக்கிப்பாரும்
பொச்சென்று போய்விடுவீர் மேலுலகம்
தப்பிவந்த நிலையுடனே குரலைக்கேட்டு
தடம்புரள எழுந்தவேகம் பெரிது-அது
பழங்கண்டு சுரந்தஉமிழ் நீரும்வாயில்
பட்டெனவே மறைந்துபோய் பசியும்உடலை
விட்டகன்று வெகுநேரம் போனதுபோலும்
'கெட்டகனி'யெனச் சொன்னது கேட்கிறதே

கண்கவர்ந்த மரமதுதான் பலன்தான்என்ன
கனிநஞ்சை விளைவாகத் தந்துள்ளதே
பார்வைக்குப் பகட்டாகச் செழிப்பிருப்பினும்
நாவுக்குச் சுவையேதும் தரவில்லையே
நல்விளைவு தராதோரை யும்நாமுமே
நச்சும ரங்களென சொல்வதில்லையா?
வெட்டி-அம் மரங்களை வீழ்த்தித்தீயில்
சுட்டெரிக்கும் இறைவார்த்தை உண்டுதானே.

அருட்பணி. N. C. அருள்வரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தினால் அருள்வாழ்வை இழந்து வீழ்ந்து பட்ட மனிதகுலத்தை மீட்டு அருள்வாழ் விற்கு இட்டுச் செல்கின்ற இறைவனது மீட்பு வரலாற்றின் திருப்புமுனையான காலகட்டத்தில் நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம். புத்தாயிரம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்களினால் அழிவுகளை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். பூகோள வெப்பமயமாதல், உலகின் துருவங்களில் உள்ள பனிக்கட்டியின் உருகும் விகிதம் அதிகரித்தல், கடல் மட்டம் உயர்தல், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என எதிர்வுகூறப்படுகின்றவை மனித வாழ்வின் இருப்பைக் கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக் கின்றன.

இத்தகைய காலகட்டத்தில் திருச்சபையும் மனித சமுதாயம் தனது பாவ வழிகளிலிருந்து இறைவனுடன் ஒப்புரவாகும்படிக்குத் தொடர்ந்து அழைப்பு விடுத்துக்கொண்டேயிருக்கின்றது. பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே இறைவன் தான் படைத்த மனிதகுலத்தின் மாண்பினைப் பாதுகாக்கும் வகையிலும் அவர்கள் தம் ஆளுகைக்கு உட்பட்ட மக்களாக வாழும்படிக்கும் அவர்களை அழைப் பதைக் காணலாம்.

இறைவன் இவ்வாறு அழைக்கும்போது அவர்களைப் பெயர்சொல்லி அழைக்கின்றார். அவர்க ளுக்கு இறைவனால் புதிய பெயர் இடப்படுகின்றது. தொடக்கநூலிலே இறைவன் ஆபிராமை அழைக் கின்றார். அவருடன் உடன்படிக்கை செய்யும்போது அவரைப் பெயர் மாற்றுகின்றார் (தொ.நூ 17:5). அவ்வாறே யாக்கோபின் பெயரையும் இஸ்ரேல் என இறைவன் மாற்றுகின்றார் (தொ.நூ 32:28). இவ்வாறே இறைவனால் மனமாற்றமும் பெயர் மாற்றமும் செய்யப்பட்ட ஒருவரே புனித பவுல் ஆவார்.

திருவிவிலியத்தில் முதன்முதலாக சவுல் எனப் பெயர்கொண்ட ஒருவர் இஸ்ராயேல் மக்களின் முதலாவது அரசனாக இறைவனால் அளிக்கப்படு கின்றார். இவர் மற்றும் இச்சம்பவம் குறித்த விளக்கங்கள் 1 சாமுவேல் 9 இலிருந்து 31 வரையான அதிகாரங்களில் தரப்பட்டுள்ளன. பென்யமின் கோத்திரத்தானாகிய சவுல் ஏனைய இஸ்ராயேல் மக்களிடம் இருந்து வித்தியாசமானவராக, அழகான வராக, உயரமானவராக அரசனுக்குரிய குணாதிசயங் களைக் கொண்டிருந்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. இருப்பினும் அரசனாகிய சவுல், கடவுளினதும் அவரது அடியாராகிய சாமுவேலின் வார்த்தைகளுக்கும் கட்டுப்படுவதை விடவும் தனது எண்ணங்களுக்கு ஏற்பவே நடந்துகொண்டதினால் இறைவனால் அவர் புறக்கணிக்கப்படுவதை நாம் காண்கிறோம். இஸ்ராயேலின் முதல் அரசனான சவுல் புகழ்பெற வில்லை. தொடர்ந்துவந்த தாவீது மற்றும் சாலமோன் அரசர்களே புகழ் பெற்றனர்.

சுமார் 1000 ஆண்டுகளின் பின்னர்

# புதிய பயணம்



இறைமகன் கிறிஸ்துவின் விண்ணேற்பின் பின்னராக இன்னுமொரு சவுல் பற்றிய விபரங் களைத் திருவிவிலி யத்தில் காண்கிறோம். திருத்தூதர் பணி 8ம் அதிகாரத்தில் ஸ்தேவா னின் மரணத்திற்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெற்றவராக சவுல் அறிமுகப்படுத் தப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தனைத் துணுக்குகள்

– வயலற்

மனோதத்துவ வைத்தியரிடம் ஒருவர்:

டாக்டர் எனக்கு ஒரே கவலை கவலையாக இருக்கிறது. மனம் சரியாகக் கலங்கிவிட்டது...

மனோ/வைத்தியர்:

கவலையே வேண்டாம். தினமும் 'சார்லி சப்ளீனின்' நகைச்சுவைப் படத்தைப் பாருங்கள் எல்லாமே சரியாகிவிடும்.

வந்தவர்:

டாக்டர் நான்தான் 'சார்லி சப்ளீன்'

கணிதமேதை ஜஸ்டைனிடம் ஒருவர் வந்து "வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி?" என்று கேட்டாராம்

அதற்கு ஜஸ்டைன் கூறினாராம் "A = X + Y + Z" என்று.

கேட்டவருக்கோ ஒன்றும் புரியவில்லை. "இதன் பொருள் என்ன?" என்றாராம்.

"A என்பது வாழ்வின் வெற்றி

X என்பது கடின உழைப்பு

Y என்பது ஆரோக்கியமான விளையாட்டு" என்றாராம்.

"அப்படியானால் Z என்பது...?"

"அதிகம் பேசாது வாயை மூடிக்கொண்டிருப்பது" என்று பதில் வந்தது.

---

யூத குலத்தையும் பென்யமின் கோத்திரத்தையும் சார்ந்த சவுல் பாலஸ்தீனத்தில் பிறந்தவரல்லர். உரோம சாம்ராஜ்ஜியத்திற்குட்பட்ட சிலிசியா நகரத்தின் தர்சு நகரத்தில் பிறந்தவர் (தி.ப : 22). இளமைக்காலம் முதலே ஜெருசலேமில் ஒரு பரிசேயராக வளர்ந்தவர். பிரபல சட்ட அறிஞரான கமாலியேல் (தி.ப : 5:34) என்பவரிடத்தில் கலவ்வி கற்று யூத திருச்சட்டங்களில் நுட்பமாகப் பயிற்சி பெற்றவர். கடவுள் மீதும், திருச்சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் முறைமையிலும் அதீத ஆர்வம் கொண்டவர். லூக்கா நற்செய்தி 18ம் அதிகாரம் 19ம் வசனத்தில் குறிப்பிடப்படுவது போன்று இயேசுவைச் சந்தித்த பரிசேயத் தலைவரைப் போன்றவர் எனக் குறிப்பிடலாம்.

பெந்தக்கொஸ்து நாளில் திருத்தூதர்கள் மேல் தூய ஆவியார் வந்திறங்கியதில் இருந்து கிறிஸ்துவின் திருச்சபை ஆரம்பமாகியது என்பது நமக்குத் தெரியும். இதே காலகட்டத்திலேயே யூத சமய சம்பிரதாயங்களில் ஊறி, அவற்றைக் கடைப்பிடிப்பதிலும், பாதுகாப்பதிலும் உக்கிரமாகச் செயற்பட்ட சவுல், கிறீஸ்தவத்தையே இல்லா தொழிக்க எடுக்கும் நடவடிக்கைகளில் முதற் கட்டமாக ஸ்தேவானின் மரணம் அமைகின்றது. தொடர்ந்து எருசலேமில் சவுல் கிறீஸ்தவர்களை சிறையில் அடைத்தார். கிறீஸ்தவ சமூகமே சிதறியது. இவ்வாறு சிதறியோர் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர் (தி.ப 8:4). கிறீஸ்தவ மறை பரவுதலுக்கு சவுல் இவ்வாறும் பங்களித்தார் எனக் கூறலாம்.

பின்னர் கிறீஸ்தவ மறையினை அழிக்கும் நோக்கத்துடனே தமஸ்கு நகரை நோக்கி தனது வீரர்களுடன் சென்றுகொண்டிருக்கிறார் சவுல். வழியில் வானத்திலிருந்து கிறீஸ்துவின் ஒளி அவரை ஆட்கொள்கின்றது. "நீ துன்புறுத்தும் இயேசு நானே" எனும் ஒலி அவரை அடைகிறது. கிறீஸ்துவே நேரடியாகச் சவுலை ஆட்கொள்கின்றார். இவை தொடர்பான விளக்கங்கள் தி.ப 9ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

சவுல் வல்லமை பெற்று இயேசுவே ஆண்டவர் என தமஸ்கு நகர யூதரிடையே போதிக்கத் தொடங்கினார். அவர்கள் இந்த மாற்றத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அத்தோடு அவரைக் கொல்லவும் முயன்றனர். இவ்வாறு அவரது தூதுரை ஆரம்ப மாகியது எனலாம்.

சவுலின் முதல் தூதுரைப் பயணம் அந்தியோக்கு திருச்சபையில் இருந்து ஆரம்பமாகின்றது (தி.ப :13). சவுலும், பர்ணபாவும் தூய ஆவியாரால் பர்ணபாவின் சொந்த நாடான சைப்பிரஸின் பகுதிகளுக்குச் சென்று போதித்தார்கள். சைப்பிரஸின் ஆளுனரான செர்கியுபவுல் ஓர் அறிஞர். அவர் கடவுளின் வார்த்தை களைக் கேட்க விரும்பி பர்ணபாவையும், சவுலையும் அழைத்தார். சவுலின் தூதுரைகளில் அவர் பெரிதும் ஆட்கொள்ளப்பட்டார். இத்னைத் தடுக்க முயன்ற மந்திரவாதியான பாரேசு எனும் போலி இறைவாக் கினரைத் தூய ஆவியாரின் துணை கொண்டு பார்வை இழக்கச் செய்கின்றார். இவற்றைக் கண்ட ஆளுனர் தனது முதற்பெயரான பவுல் என்னும் பெயரை சவுல் பயன்படுத்து வதற்கு அனுமதி வழங்குகின்றார்.

13ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

அதிகாரமும், பதவியும் தன் கைக்கு வந்துவிட்டால் சிலருக்கு எப்படி நடக்க வேண்டும் என்பது புரிவதில்லை, என்றாலும் சிலருக்கு மட்டும் தன்னடக்கம் தானாகவே வந்துவிடும். இதில் முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் அடக்கம். இலங்கையைப் பொறுத்தமட்டில் மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் நல்ல முன்னுதாரணம். இப்பட்டியலில் இந்தியாவின் தேசாதிபதியாக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களையும் உள்ளீர்க்கலாம்.

ஒரு முறை இராஜாஜி அவர்களும் அவரது நண்பரும் புகைவண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்த நண்பரின் கைக்கடிகாரம் தவறுதலாக நழுவி வெளியில் விழுந்து விட்டது. அக்காலத்தில் கைக்கடிகாரம் என்பது



விலை உயர்வான பண்டம். அவர் பதறிப்போய் இராஜாஜி அவர்களிடம் "புகைவண்டியை நிறுத்துங்கள்; என் கடிகாரம் விழுந்துவிட்டது" என்று சொன்னார். இராஜாஜி நினைத்திருந்தால் வண்டியை நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அப்படியெதுவும் செய்யாமல் வெளியில் வெறித்துப் பார்த்தபடி வாயில் எதையோ முணுமுணுத்தபடி பயணம் செய்துகொண்டு இருந்தார். நண்பருக்கோ இராஜாஜியின்மேல் வருத்தம். தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் இருக்கின்றாரே என்று.

அடுத்த நிலையத்தில் வண்டி நின்றதும் புகையிரத நிலைய அதிபர், மரியாதை நிமித்தம் இராஜாஜி அவர்களைப் பார்க்க வந்தார். இராஜாஜி அவர்கள் அதிபரிடம் "இங்கிருந்து 52ம் தந்திக் கம்பத்தின் அருகில் இவரது கைக்கடிகாரம் விழுந்து விட்டது. யாரையாவது அனுப்பி எடுத்துவரச் சொல்லுங்கள்" என்று அமைதியாகச் சொன்னார். சில நிமிடங்களில் நண்பரின் கடிகாரம் பத்திரமாக வந்து சேர்ந்தது.

கடிகாரம் விழுந்ததும் இராஜாஜி தந்திக்கம்பங்களை எண்ணிக்கொண்டு வந்திருக்கின்றார். நண்பருக்கோ இராஜாஜியின் மேல் அளவற்ற மரியாதை உண்டாகியது. இராஜாஜி உணர்ச்சிவசப் படவில்லை. நண்பருக்குச் சிக்கல் என்று பதறவில்லை. அறிவு பூர்வமாக பிரச்சினையை அவர் தீர்த்து வைத்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தரிசிப்பின் முடிவில்..

**- சிறுகதை**

அந்த வீதியில் உள்ள சோதனைச் சாவடிகளில் நிற்கும் சீருடைக்காரர்கள் என்னைக் கண்டுகொள்வதே இல்லை. என்னுடைய வழுக்கைத் தலையும் வயதுக்கு மீறிய மூப்பும் மட்டுமல்ல நாடான் கடையில்கூட வாங்க மாட்டாத கறள் கட்டிய மோட்ட சைக்கிள். இந்தக் கோலத்தில் தினமும் நான் போய்வருவதும் கூட ஒரு காரணம். அன்றைய புறோகிராமின்படி குறிப்பிட்ட அந்த கொலனிப் பாடசாலையை நோக்கிச் சென்றேன். குன்றும் குழியுமான கிறவல் மண்வீதியில் அல்லல்களோடு ஊர்ந்து கண்ணில் பட்ட அந்தக் கடையினுள் நுழைந்தேன். கரிபிடித்த பானையொன்று அடுப்பில் குந்தியிருந்தது. ஒரு பழைய மேசை, அதில் ஊத்தையேறிய மூன்று மிட்டாய் போத்தல்கள். பாதி கருகிய வாழைக்குலை, மட்டைப் பெட்டியினுள் இரண்டு பாண்கள். புறவெட்டுப் பலகையால் அடிக்கபட்ட ஒரு வாங்கு.

வயிறு பசித்தது. தினமும் காலைத் தேத்தண்ணி கூட இல்லாமல் என்னை அனுப்பும் என் மனைவியைத் திட்டினேன். சீனியைக் கரண்டி நுனியால் கிள்ளிப்போட்டு கடகடவென ஆட்டிவிட்டு நீட்டினான் கிழவன். வெறும் சாயத்தண்ணி, சூடு கூட இல்லை. "ஐயா, இந்தப் பக்கம் எங்க போகயோ" கூடவே கிழவனின் கேள்வியும். "ஒண்டுமில்ல இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில படிப்பு என்னமாதிரியெண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்க வந்தனான்" என்றேன். "அதென்னத்தையா பாக்கப் போறயள். நீங்கல்லாம் ஆண்டுல ஒருக்கா ஆவணில ஒருக்கா வந்து இதுகள எப்பிடித் திருத்தப் போறயளோ, பேப்ங்கோ போய்ப் பாருங்கோ." கிழவனின் பேச்சு கடுப்பை ஏற்றிவிட உதைத்தேன். புகையைக் கக்கியபடி மோட்டசைக்கிள் உருண்டது.

இரண்டு குமர்ப்பெட்டைகள் இடுப்பில் குடங்களுடன் தண்ணி அள்ளிவரச் சென்றார்கள். தென்னோலை ஈர்க்கிலால் சுருக்குச் செய்து பிடித்த ஓணானுடன் சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். தூண்டல் கம்பும், மீன் பானையுமாய் ஒரு கிழவி நடந்துகொண்டிருந்தாள். பரட்டைத் தலைக் குழந்தையொன்று ஓலைக் குடிசையின் வெளிப்புறமாக வாழை நாரால் கட்டப்பட்ட சோமாலியா நாய்க்குட்டியொன்றை இழுத்துச் செல்கிறது. மூக்கால் ஓடிய சளி அக்குழந்தையின் வாய்க்குள் இறங்கிக்கொண்டிருந்தது. திருப்பத்தால் வளைந்ததும் பாடசாலை தென்பட்டது. இறங்கினேன்.

அதிபரிடம் எந்தவித சலனமும் இல்லை. இந்தப் பிரதேசத்தில் ஒவ்வொரு மனிதரையும் நானறிவேன். யாரிடம் எப்படிப் பேசுவதென்பது எனக்கு அத்துப்படி. ஒரு சில வார்த்தைகளுடன் வகுப்பறை மேற்பார்வைக்காக நகர்ந்தேன். தரம் 7ல் இந்த வருடம்தான் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. அதனால் அந்த வகுப்பறையில் நுழைந்தபோது கொஞ்சம் கலவரமாக முகங்கள் என்னைப் பார்த்தன. அழுக்குச் சட்டைகள், பட்டன்கள் இல்லாமல் ஊசி குத்தப்பட்ட சேட்கள், சப்பாத்து இல்லாத கால்கள், பெருமளவில் ரை இல்லாத கழுத்துகள். இவை அப்பிரதேசத்தின் வறுமை நிலையை எனக்குப் பறைசாற்றின. முன்னும் பின்னுமாக பல குரல்கள் "குட்மோணிங் சேர்" என்றன. "குட்மோணிங் பிள்ளைகள்" என்றபடி திரும்ப, வித்யா ரீச்சர் "எக்ஸ்கியூஸ்மி சேர்" என்றபடி நுழைந்தாள். "என்ன ரீச்சர் கொஞ்சம் டென்சனா இருக்கிற மாதிரி" என்றேன். "அப்பிடியொண்டுமில்ல சேர். கொஞ்சம் ஸ்ராப் றூம் வரை வர முடியுமா சேர்" என் உள்மனதில் சம்திங் றோங் விழுந்தது. "வாங்க ரீச்சர் என்றபடி நடந்தேன். ஒரு வாங்கில் அவள் மிரள மிரள பார்த்தபடி இருந்தாள். பாவலர் பசீல் காரியப்பர் படம் பிடித்துள்ள தங்கம்மாவின் மகள் அச்சும்மாவின் தோற்றம் அப்படியே தெரிந்தது. அவள் ஏழாம் ஆண்டில் படிக்கும் மாணவி. காலையில் எதிர்வீட்டு மணியக்கா வாசலுக்கு முன்னால் குப்பையைப் போடவும் உருவேறி ஒரு ஆட்டம் ஆடி முடித்துவிட்டு பாடசாலை வந்து, இரண்டாம் பாடத்திற்கு அவ்வகுப்பினுள் நுழைந்த வித்யா ரீச்சர் "நேற்று நான் தந்த ஆறாம் அலகுக் கணக்குகள் செய்து வந்தீங்களா?" என்றாள். எல்லோரும் "ஓம் ரீச்சர்" என்றனர். அவள் மட்டும் தலையைக் குனித்தபடி இருந்தாள். ரீச்சரின் கண்கள் அவளில் பதிந்தன. "பவானி மெற்ஸ் கொப்பிய எடுத்துக்கொண்டு வா"

அயர்லாந்தில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் எரிமலை ஒன்று வெடித்தது. அதன் விளைவு என்ன தெரியுமா?

எரிமலையின் நெருப்புக் குழம்பு குளிர்ந்து ஆறு பக்கங்கள் கொண்ட பாறைகள் சுமார் 40,000க்கும் மேல் உருவாகியுள்ளன. இந்த வினோதமான சுற்றுலாத்தலம் இருக்கும் இடத்தின் பெயர் Giant's Causeway






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் பயம். நெஞ்சு படபடக்க கால்கள் நகர மறுக்க மெல்ல மெல்ல வந்தாள். கையிலிருந்த பயிற்சிக் கொப்பியை இழுத்தெடுத்து விரித்த போது கணக்குகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

"என்ன பவானி ஏன் கணக்குகள் செய்து வரல்ல" இந்தக் கேள்வியை பல தொனிகளில் பல தடவைகள் கேட்டாள் வித்யா ரீச்சர். பதில் மௌனம் மட்டுமே. மாணவர்கள் அடங்கிப் போயிருந்தனர். பயத்தில் பவானியின் சூம்பிய விரல்கள் நடுங்கின. காலையில் எதிர்வீட்டு மணி திட்டிய வார்த்தைகள் காதில் எதிரொலித்தன. முதல் நாள் வருவித்த கம்பு மூலையில் கிடந்தது. முதல் அடி வலது கையில் விழவே இரண்டாவது அடிக்கு இடது கையை நீட்டினாள். மூன்றாவதாகவும் கம்பு உயர்ந்தபோது கன்றிச் சிவந்த கைகளைக் கூப்பி "அடிக்காதிங்க ரீச்சர், அடிக்காதிங்க ரீச்சர்" என்றழுதாள். ஆனால் மெலிந்த கால்களில் மூன்றாவது அடியும் விழுந்தபோது மயங்கிச் சரிந்தாள்.

சாந்தி ரீச்சர் ஓடிவந்து ஓ.எல் பிள்ளைகள் இரண்டு பேரைக் கூப்பிட்டு பவானியைத் தூக்கிக் கொண்டுபோய் ஸ்ராப் றூமில் படுக்கவைத்து முகத்தில் நீர் தெளித்து, தன்னுடைய பிளாஸ்கைத் திறந்து ரீ ஊற்றி, ஆற வைத்து மெதுவாகப் புகட்டினாள். கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திய பவானி மெல்ல எழுந்தபோது "பிள்ள ஏனம்மா ஹோம்வேக் செய்துவரல்ல, என்ன வீட்டில ஏதும் பிரச்சினையா.." அவள் அப்போதுதான் அழுதாள். "அப்பா உழச்சதையெல்லாம் குடிச்சுப்போட்டு வெறுங்கையோட வீட்ட வந்தவரு ரீச்சர். எங்களுக்கு சாப்பாடுகூட இல்ல ரீச்சர். அம்மா தங்கச்சிக்குப் பழைய சோத்த தேங்காப்பூவோட குடுத்தவ. அம்மாவும் நானும் பட்டினிதான் ரீச்சர். விளக்குக்கு லாம்பெண்ணை இல்ல. அதான் ரீச்சர் நா..நான் ஹோம்வேக் எழுதல்ல..." விசும்பலிடையே கூறிமுடித்தாள் பவானி. கதவருகே கேட்டுக்கொண்டு நின்ற வித்யா ரீச்சர் உடைந்து போனாள். என்னுடைய பட்டம், பட்டப் பின்படிப்பு, நான் படித்த உளவியல் எல்லாமே வீண். அத்தனை பிள்ளைகளுக்கும் முன்னால் தன் வறுமையைச் சொல்லமுடியாமல் தவித்த அந்தப் பிஞ்சு மனதைப் புரிந்து கொள்ள முடியாத ஒரு மரக்கட்டையா நான்? அவள் உள்ளம் அழுதது.

"சேர் தயவுசெய்து எனக்கொரு ராண்ஸ்பர் கிடைக்க உதவி செய்யுங்கோ சேர்." இது கலங்கிப் போன வித்யா ரீச்சரின் குரல். "ரீச்சர் நான் ஒரு உண்மையைச் சொல்லுறன். கோவிக்க வேணாம். இண்டைக்குவரைக்கும் ஒரு உண்மையான ஆசிரியையாக நீங்க சேவையாற்றல்ல. ஆனா இனிமேல் உங்களால அது முடியும். இனி ஒவ்வொரு நிமிசமும் உங்கட சிந்தனை, செயல் எல்லாமே இந்த பாவப்பட்ட பிஞ்சுகளுக்காக இருக்கும். உங்கட சேவை இனித்தான் இந்தப் பாடசாலைக்குத் தேவை." என்றபோது வித்யா ரீச்சரின் கண்கள் சில துளிகளைச் சிந்தின. திரும்பிப் பார்த்தேன். எதுவும் புரியாதவளாக நிறைந்த சோகத்துடன் அந்த மாணவி அமர்ந்திருந்தாள். நீண்ட பெருமூச்சொன்று என்னிடமிருந்து விடைபெற என் கால்கள் நகர்ந்தன.

**- பைந்தமிழ்க் குமரன் தாவீது -**

# சிந்தனைக்காக சில துளிகள்

**- வயலற்**

- வாடிய நாரில் வாடாத மலரைத் தொடுக்கும் சமுதாயம் வாடாத நாரில் வாடிய மலரைத் தொடுப்பதில்லையே.
- உனது நம்பிக்கையை பணத்தில் வைக்காதே, பணத்தை நம்பிக்கையான இடத்தில் வை.
- சுமைதாங்கியாக இரு, சுமை இழுக்கும் கழுதையாகாதே.
- பாசமாக இரு, அதற்காக அனைத்தையும் பறிகொடுக்காதே.
- ஏணியாக இருந்து ஏமாறாதே, ஏறிச் செல்பவனாக இரு. ஏணியை யாரும் ஏற்றிவிடமாட்டார்கள்.
- நம்பிக்கையை முதலில் உன்னிடம் வை. சாதனை சதிராடும்.
- மாபெரும் சக்தி உனக்குள் உண்டு. கண்டுபிடித்தால் நீதான் திறமைசாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

அலகு - 2

ம. குமுதா (சிறப்புக் கலைமாணி)

## நிருபங்களில் வியாபித்து நிற்கும் ஒழுக்க விழுமியங்கள்.



### 5. பொதுத் திருமுகங்களின் ஒழுக்கம்

புதிய ஏற்பாட்டுத் திருமுகங்களுள் யாக்கோபு, 1,2 பேதுரு, 1,2,3 யோவான், யூதா ஆகிய திருமுகங்கள் பொதுத் திருமுகங்களாகக் காணப்படுகின்றன. இவை குறிப்பிட்ட சபைக்கு என இல்லாமல், பொதுவாக அனைத்துலகத் திருச்சபைக்கும் எழுதப் பட்டுள்ளதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

யாக்கோபு தனிப் பண்பாட்டையும், நன்நடத்தை பற்றிய ஆலோசனைகளையும், பேதுரு கிறீஸ்தவ வாழ்வின் கடமைகள், உண்மையான வாழ்வு, சகோதர அன்பு ஆகியவை பற்றியும் யூதா கிறீஸ்தவ வாழ்வில் அன்பின் கடமைகளைப் பொறுப்புடன் ஆற்றுதல் பற்றியும் தமது நிருபங்களில் எழுதியுள்ளனர். "நம்பிக்கை, நற்பண்பு, அறிவு, தன்னடக்கம், மனவுறுதி, இறைப்பற்று, சகோதர நேசம் ஆகிய எட்டுப் புண்ணியங்களையும் கடைப்பிடிப்பதன் வழியாக கிறீஸ்தவ விசுவாசத்தில் வளர்ச்சி பெறவேண்டும்" என்கிறார் தூய பேதுரு.

இவற்றிலிருந்து நாம் புனித பவுலும் பொதுத் திருமுக ஆசிரியர்களும் தம் காலத்தில் நிலவிய சூழ்நிலைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் பதிலாக எழுதிய வாழ்வின் ஒழுங்குமுறைகள் கிறீஸ்தவ மதிப்பீடுகள் அடங்கிய ஒரு திரட்டாக நிருபங்கள் காணப்படுகின்றன. இவை எமது வாழ்க்கைச் சூழலிலும் எடுத்துப் பயன்பெறக்கூடிய விழுமியக் கருத்துகளாக அமைந்துள்ளன என்பதில் மிகையில்லை.

– தொடரும் –

அடிக்குறிப்பு

- அமலதாசன், கத்தோலிக்கத் திருமறை விளக்கம், (3ம் பக்கம்) 1964, பக்கம் - 17
- அ.பீட்டர் அபீர், சவுலே சவுலே, ஜனவரி 1986, பக்கம் - 236
- அ.சவரிமுத்து, எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் விளக்கவுரை, ஆவணி 1971 பக்கம்-200

## குறும்(புப்)பா - 6




சின்ன இடை செவ்வாழைத் தொடை
தேன் சிந்தும் அவளழகுக் கடை
சென்றுகண்டு வந்தவர்கள் வாங்கியது மேனியில்
கொன்றுவிடும் கொடியநோய்ப் படை

– மலர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## பாதஹஸ்தாசனம்

(நின்ற கொக்காசனம்)



1. விரிப்பின்மீது கால்களை இணைத்து நிமிர்ந்து நிற்கவும்.
2. கைகளைப் பக்கவாட்டில் கொண்டுவந்து தலைக்குமேல் காதுகளை ஒட்டியவாறு கைகளை மடிக்காமல் உயர்த்தவும்.
3. மெதுவாக முன்னால் குனிந்து கால்களின் பெருவிரல்களை தொட முயற்சிக்கவும்.
4. முடிந்தால் கால் பாதங்களைப் பற்றி முன்னால் வளைந்து நெற்றிப்பொட்டு கால் முட்டிகளைத் தொடும்படி முயற்சிக்கவும்.
5. எக்காரணத்தை முன்னிட்டும் ஆசன நிலையில் கால்களை வளைக்கக் கூடாது.
6. ஆசன நிலையில் இயல்பான மூச்சில் இருக்க வேண்டும்.
7. 10 முதல் 20 வினாடிகள் வரை செய்யலாம்.
8. பின்னர் சுவாசத்தை உள்ளிழுத்துக்கொண்டே பழைய நிலைக்கு வரவும்.
9. சிறிய ஓய்வுக்குப் பின் மறுபடியும் முன்பு கூறியபடி செய்யவும்.
10. மூன்று முறை செய்து ஆரம்ப நிலைக்கு வந்து ஓய்வு எடுக்கவும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

1. அழகாகத் தோற்றமளிக்க விரும்பும் அனைவருக்கும் உகந்த ஆசனம்.
2. மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம், ஞாபக சக்தி, புத்துணர்ச்சி போன்ற அனைத்தும் கிடைக்கின்றது.
3. கண்பார்வை தெளிவடைவதோடு தலைமுடியும் நன்கு வளரும்.
4. சீரான இரத்த ஓட்டத்தை மூளை பெறுவதால் மாணவர்களுக்கு சிந்திக்கும் ஆற்றல் கிடைக்கிறது.
5. எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

### தீரும் நோய்கள்

1. வயிற்றுவலி, நீரிழிவு ஆகியவற்றைப் போக்குகின்றது.
2. வாயு உபாதைகள் நீங்கி நாடிகள் சுத்தமாகும்.
3. பெண்களின் மாதவிடாய்க் கோளாறுகளைச் சரி செய்கின்றது.
4. ஆண்களின் மலட்டுத்தனம், ஆண்மையின்மை ஆகியவற்றைப் போக்குகின்றது.
5. உடல் எடை குறையும் தலைவலிகள் மறையும்.

### மாற்றாசனங்கள்

1. ஹலாசனம்
2. பிறையாசனம்
3. தனுராசனம்
4. புஜங்காசனம்.

### குறிப்புகள்

1. இருதயக் கோளாறு, இரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஆசிரியரிடம் ஆலோசனை பெற்றபின் செய்யவும்
2. அடி முதுகுவலி, முதுகுத்தண்டு கோளாறு உள்ளவர்கள் இவ்வாசனத்தைச் செய்யக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உடனடியாக முன்னால் வளைந்து உடலை நோகச் செய்யாமல் படிப்படியாகச் செய்து பழகவும்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar
(India)

# மிகப்பெரிய பாலூட்டி



உலகில் வாழ்ந்த பாலூட்டிகளிலேயே மிகப் பெரியது இன்ட்ரிக்கோதீரியம் (Indrico therium) இதன் எடை வளர்ந்த ஐந்து யானைகளின் எடைக்குச் சமனானது.

6ம் பக்கத் தொடர்ச்சி...

திருத்தூதர் பணி அதிகாரம் 13, திருவசனம் 13 இலிருந்து சடுதியாக சவுல் எனும் பெயர் மறைந்து பவுல் எனும் நாமம் இடம்பெறுவதைக் காண்கிறோம்.

பவுல் எனும் பெயர் உரோம, கிரேக்க மக்களிடையே வழக்கத்திலிருந்த பெயராகும். உண்மை யூதராகிய சவுல், கிறீஸ்துவிற்காக அனைத்தையும் இழக்கின்றார் (பிலிப்பியர் 3:8). புறவினத்தாரின் திருத்தூதராக அழைக்கப்பட்ட அவர் தனது பெயரையும் அவ்வாறே பவுல் என மாற்றிக்கொள்கின்றார். இது அவரது முதலாவது தூதுரைப் பயணத்தில் இடம்பெறுகின்றது.

இஸ்ராயேல் மக்களின் முதல் அரசனாகிய சவுல் கடவுளின் கட்டளைகளை விடுத்து தனது அதிகாரத்தின்படி வாழ்ந்ததினால் புகழ் இழந்தார். இறைமகன் கிறீஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்ட சவுலோ, தன்னையே இழந்து பவுலாக மாறி தூதுரைத்தார். இன்றும் உரைக்கின்றார். கிறீஸ்துவிற்கான இவரது பணி இனியும் தொடரும்.

-- Dr. K. E. கருணாகரன் --



உசாத்துணை:

- திருவிவிலியம் (இணைத் திருமுறையுடன்) பொது மொழிபெயர்ப்பு - ஐந்தாம் பதிப்பு
- Christian Community Bible - 6th Edition




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்குதல்

ஜீவராசிகளுள் சிரிக்கவும், சிந்திக்கவும், சீர்தூக்கிப்பார்க்கவும், பாடவும், படிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை முன்வைக்கவும் தெரிந்த ஒரேயொரு ஜீவராசி மனிதன் மட்டுமே. ஆனாலும் அவன் பல்வேறுபட்ட உணர்வுகளின் ஒட்டுமொத்த வடிவமாகவே காணப்படுகிறான்.

- அன்புக்காக ஏங்கும் உணர்வு
- ஆசைப்படும் உணர்வு
- கோபப்படும் உணர்வு
- ஆனந்தப்படும் உணர்வு
- பாலியல் உணர்வு
- பொறாமை உணர்வு
- வெறுப்பு உணர்வு
- பசி உணர்வு
- தற்பெருமை உணர்வு
- தாழ்வு உணர்வு
- தன்மான உணர்வு



- சுயநல உணர்வு
- பிறர் சினேக உணர்வு
- பழிவாங்கும் உணர்வு

இவ்வாறான பல்வேறு உணர்வுக் கலவைகளால் உருவானவனே மனிதன். மனித உணர்வுகள் பற்றிய ஆய்வுகளை உலகில் பல்வேறு பல்கலைக் கழகங்களும், உளவியலாளர்களும், சமூகவியலாளர்களும் ஆய்வு செய்தவண்ணமே இருக்கிறார்கள். உள/சமுகவியலாளர்களின் கண்ணோட்டத்தில் "பழிவாங்குதல்" (REVENGE) என்ற எண்ணக்கரு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இன்று மிக மிக அன்னியோன்னியமாகப் பழகியவர்கள் கூட, நாளை ஏதோவொரு காரணத்தால் எதிரிகளாகி பழிவாங்குகிறார்கள்; சந்தர்ப்பம் பார்த்து சதி செய்கிறார்கள்.

நண்பன் தனது சக நண்பனைப் பழிவாங்குகிறான். பிள்ளைகள் வளர்ந்ததும் பெற்றோரைப் பழிவாங்குகிறார்கள். பெற்றோர் தமது அபிலாசைகளை மீறும் பிள்ளைகளைப் பழிவாங்குகிறார்கள். சகோதரர்களுக்கிடையில் முரண்பாடு மூண்டதும் ஆளையாள் பழிவாங்குகிறார்கள். அதிகாரிகள் அடங்கா ஊழியர்களைப் பழிவாங்க, ஊழியர்கள் அதிகாரிகளைப் பழிவாங்குகிறார்கள். இன்னும் அரசியற் பழிவாங்கல்கள். இந்தப் பழிவாங்கும் உணர்ச்சியின் முன் அன்பு, பாசம், நன்றி, காதல், காமம் எல்லாமே பொசுங்கிச் சாம்பலாகிவிடுகிறது.

பழிவாங்குவதிலும் பல ரகங்களுண்டு:

- நேரடியாகப் பழிவாங்குதல்
- வேறு சிலரை ஏவிவிட்டுப் பழிவாங்கல்
- உறவாடிப் பழிவாங்கல் (கூடவிருந்தே குழிபறித்தல்)
- குழுக்களாக இணைந்து பழிவாங்கல்
- தொழில் ரீதியான பழிவாங்கல்
- அரசியற் பழிவாங்கல்
- பழிக்குப் பழிவாங்கல்

இவ்வாறு பழிவாங்கலானது பல்வேறுபட்ட கோணங்களில் நின்று பழிவாங்குகிறது. அரசியற் பழிவாங்கல்களாக இனந்தெரியாதோராற் சுட்டுக் கொலை. கிளேமோர் குண்டுத்தாக்குதலில் மந்திரி உட்படப் பலபேர் மரணம்.

பிறரைத் தூண்டிவிட்டுப் பழிவாங்கும் முறை: இலக்கியத்தில் இராமனைப் பழிவாங்க கூனி (மந்தரை) கைகேயியைத் தூண்டிவிட்டு இராமரை வனவாசம் அனுப்பினாள். அதேபோன்று மூக்கறுபட்ட சூர்ப்பனகை, தனது அண்ணனான இராவணனைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தாள்.

பழிவாங்கும் உணர்வு, தான் பாதிக்கப் பட்டாலும் பரவாயில்லை, ஆனால் தனது எதிரி அதைவிட அதிகமாகவே பாதிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கிறது. தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் எங்கோ, எப்போதோ பழிவாங்கப்பட்டிருக்கலாம். ஆனால் இவர்கள் உயிரைக்கூடத் தூசாக மதித்து பழிக்குப் பழி வாங்கிவிடுகிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் மனித மனம் எப்போதும் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருப்பதில்லை. அடிக்கடி மாறுபடும் தன்மை உள்ளது.

ஒருத்தி மீது அதீத தீவிர அன்பு கொண்டவன், அவளே தன் உயிரெனக் கூறியவன் அவள் இன்னொருவன் பின் போகையில் கொலையும் செய்கிறான். பழிவாங்கும் உணர்வு பிறரை மட்டுமல்ல, தன்னைத் தானே பழிவாங்கவும் செய்கிறது. தற்கொலை செய்தல், தனது கையை கூரிய ஆயுதத்தால் வெட்டுதல், நெருப்பால் சுடுதல். தான் எதிர்பார்த்தது நடக்காதபோது தடை செய்தோரைப் பழிவாங்க இவ்வாறும் செய்கிறது. முதலில் பழிவாங்கக் காரணங்கள் (Factors) என்ன எனப் பார்ப்போம்:

- தனது அபிலாசைகளை நிறைவேற்றவிடாது யாராவது குறுக்கே வந்தால்
- ஏமாற்றங்களை ஜீரணிக்க முடியாமை
- ஒழுங்கான கட்டுப்பாடின்மை
- தன்னைத் தானே இனங்கண்டு வழிப்படுத்தத் தெரியாமை
- அளவுக்கதிகமான சுதந்திரம்
- அன்பு கலக்காத கடும் கண்டிப்பு
- தாழ்வு மனப்பான்மை
- சுயகணிப்பீட்டுத் தேவை பூர்த்திசெய்யப்படாமை (வீட்டில், பாடசாலையில், பல்கலைக்கழகத்தில், தன்னை மதித்து மரியாதை அளித்து வாழ்த்தாமை)
- திறமைகள் - ஆற்றல்கள், கல்வி முன்னேற்றங்களில் பின்னடைவுகள்
- உளவியற் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை
- பாலியல் உணர்வுகள் பூர்த்தி செய்யப்படாமை
- குடும்பப் பிளவுகள், பிரிவுகள், சண்டைகள், போட்டிகள், பொறாமைகள், தீயபழக்கவழக்கமுடையோர் குடும்பத்திற் காணப்படல் (குடிகாரத் தந்தை)
- உரிமைகள் உரியநேரத்தில் கிடைக்காமை
- கடுமையான கட்டுப்பாடுகள்
- விரக்தி மேலிடல்

முதலில் பழிவாங்கும் உணர்வை இனங்காண வேண்டும். பின்பு அதை வழிப்படுத்தி வெற்றியும் கொள்ளலாம். பழிவாங்கும் உணர்விற்குத் தான் அடிமையாகாது, பழிவாங்கும் உணர்வைத் தானே வெற்றிகொள்ளலாம்.

**பழிவாங்கும் உணர்வின் பின்விளைவுகள்**

- தன்னைத் தான் அழிப்பதால் தனக்குத்தானே குழிவெட்டுகிறார்
- கொலை செய்தால் சிறைவாசம் செல்கிறார்.
- பின்பு தனக்கொரு உதவிகேட்டுப் போகமுடியா நிலை
- மனச்சாட்சி உறுத்துவதால் குற்ற உணர்வால் குமுறும் நிலை உருவாகல்

இவ்வாறான பழிவாங்கல் உணர்வுகளை வழிப்படுத்த, நெறிப்படுத்த உளவியற்பயிற்சிகள், உளவள ஆலோசனைகள் வழங்கப்படல் வேண்டும்.

- மன்னிக்கும் மனப்பாங்கு, விட்டுக்கொடுத்தல், பிறரது ஆற்றல்கள் திறமைகளை ஏற்றுநடத்தல், பிறரை மதித்தல், எதிர் நீச்சல் போட்டு புதிய வாழ்க்கையை ஆரம்பித்து வாழ்ந்து காட்டல். "தோல்வி மட்டுமல்ல வெற்றியுந்தான் வாழ்க்கை என உணருதல்"

பிறர் உங்களை எள்ளி நகையாடினால் உங்களுக்கே நீங்கள் சொல்லுங்கள்:

- நன்மைகள் மட்டுமே செய்த இயேசுவை இச்சமூகம் இதற்கு முன்பே சிலுவையில் அறைந்தது.
- இந்தியாவிற்கே சுதந்திரம் பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தியை கோட்சே சுடவில்லையா?
- இனவெறியர்களுக்கு எதிராகப் போராடிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனை ஜோன்விக்ஸ் சுட்டுக்கொல்லவில்லையா?
- சோக்ரடீசையே (தத்துவ ஞானி) நஞ்சூட்டிக் கொல்லவில்லையா?
- யூலியசீசரை உற்ற நண்பன் புரூட்டஸ் கத்தியால் குத்திக் கொல்லவில்லையா?
- ரஷ்ய நாட்டைக் கைப்பற்றச் சென்ற மாவீரன் நெப்போலியன் தோல்விகண்டு வந்தபோது மக்கள்கூட்டம் அவன் முகத்தில் காறி உமிழவில்லையா?


புதிதாக உனக்கு என்ன செய்துவிட்டது? இதுதான் அன்றும், இன்றும், எப்போதும் செய்து வருகின்றது. எதிரிகளோடு வாதாடுவதைவிட மௌனியாவது மேல். எதையும் ஏற்கும் சக்தியை வளர்த்து வெற்றி பெறுங்கள். எதிரியை வெல்வதைவிட புரிந்துகொள்ளுங்கள்.

- வயலற் சந்திரசேகரம் B.com & Dip in Ed -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' கலாபூஷணம் தாபி சுப்பிரமணியம் அவர்களின் நேர்காணல் இடம் பெறுகின்றது. பிரபல எழுத்தாளரான இவரின் நேர்காணலை மேற்கொள்வதற்கு திருகோணமலையைச் சேர்ந்த கலாபூஷணம் புலவர் அரியநாயகம் அவர்கள் பெரிதும் உதவியாக இருந்தார். அவருக்கும் தொண்டனின் நன்றிகள்.

தாபி சுப்பிரமணியம் அவர்கள் சிறுகதையாளர், நாவலாசிரியர், ஓவியர், வானொலி நாடக எழுத்தாளர், சாரணர், ஆசிரியர், அதிபர் என்ற பல்வேறு முகங்கள் கொண்டவர்.

**கலை இலக்கியப் பரப்பில் பல்வேறு வடிவங்களில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தங்களை 'தொண்டன்' சார்பில் நேர்காணுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

எனக்கும் மகிழ்ச்சிதான்.

**எழுத்துத் துறையில் தங்களின் ஆரம்ப நிலையைக் கூறலாமா?**

நிச்சயமாக. கல்விக்காலத்திலேயே அதாவது படித்துக்கொண்டிருக்கும் போதே என்னையறியாமலே எழுத்துத் துறைக்குள் பிரவேசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது என் அதிஷ்டம்தான். 'அறிவுச்சுடர்' என்ற பெயரில் மாணவர்கள் கையெழுத்துப் பிரதியொன்றை மாதாமாதம் எழுதி வெளியிட்டோம். அந்தப் பிரதிக்கான சகல ஓவியங்களையும் நானே வரைந்தேன்.

ஆசிரியர்களின் அமோகப் பாராட்டைப் பெற்ற அந்த கையெழுத்துப் பிரதியில் வெளிவந்த 'விடாமுயற்சி' என்னும் சிறுகதையை ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழகத்திலிருந்து அப்போது வெளிவந்துகொண்டிருந்த சிறுவர் சஞ்சிகையான 'கரும்பு' இதழுக்கு அனுப்பி வைத்தேன்.

கரும்பு 11.12.1955 இதழில் அச்சிறுகதை பிரசுரமாகியிருந்தது. அச்சில் வெளிவந்த அந்தச் சிறுகதையை திருப்பித் திருப்பி நான் எத்தனை முறை வாசித்தேன் என்று எனக்கே தெரியாது. ஆசிரியர்களின் உற்சாகமும், எனது முதற் சிறுகதை அச்சில் வெளிவந்த மகிழ்ச்சியுமே நான் தொடர்ந்து எழுதத் துணையாக அமைந்தது. அன்றிலிருந்து (1955) இன்றுவரை தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**ஆரம்ப காலத்தைக் குறிப்பிட்டீர்கள். நன்றி. உங்கள் எழுத்து மேலும் தொடர்வது பற்றி...**

எழுத்துத் தொடர்பை மூன்று விதமாக நினைக்கிறேன்.

1. ஆரம்ப காலம்:

ஆரம்பகாலம் அனேகமாக மாணவப் பருவமாக இருந்ததினால் அன்றைய படைப்புகள் மாணவத் தன்மையானதாகவே அமைந்திருந்தது. முதலாவது சிறுகதை வெளிவந்த அல்லது பிறந்த விதத்தை பகிர்ந்துகொள்வது நல்லது என நினைக்கிறேன்.

எங்கள் பாடசாலை அதிபரின் ஆசிரியப் பணி வெள்ளிவிழாவை முன்னிட்டு பாடசாலை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துடன் மூடப்பட்டது (அப்போது பாடசாலைகள் இரு நேரமாக காலை 8.30 முதல் 12.00 வரை பின் 1.30 முதல் 3.30 வரை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது). குறிப்பிட்ட தினத்தில் ஒரு நேரமாக மூடப்பட்டதனால் கிடைத்த அந்த அரைநாள் லீவைக் கழிக்கு முகமாக இலங்கையின் முதலாவது வாசிகசாலை (1885ல் நிறுவப்பட்டது) என்று பெருமை பெற்ற கடற்கரையை அண்டியிருந்த வாசிகசாலைக்கு நண்பன் ஜோசேப் சகிதம் சென்றேன்.

உள்ளே நுழைய முற்படும்போது வெளி வீதியில் பெரும் சத்தம் கேட்டது. எட்டிப்பார்த்த போது காரொன்று யாரையோ மோதிவிட்டு ஓடிக் கொண்டிருந்தது. காரின் இலக்கத்தை மனதில் பதித்துக்கொண்டு வாசிகசாலைக்குள் நுழைந்தபின் பொக்கற்றுக்குள் இருந்த டைரியில் அதன் இலக் கத்தை எழுதி வைத்தேன். இதற்குக் காரணம் எனது அப்போதைய பொழுதுபோக்குகளில் ஒன்றான வாகனங்களின் இலக்கங்களை அதன் நிறத்தை அதன் தன்மையை எழுதி வைத்தி ருப்பதே.

இது நடந்து மூன்று நாட்களுக்குப் பிறகு வகுப்பறையில் கற்றுக்கொண்டிருக்கும்போது பொலீஸ் அதிகாரி என்னை அழைப்பதாக ஆசிரியர் கூறினார். மிகவும் பயந்த நிலையில் நான் தலைமையாசிரியரின் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அங்கு நின்றிருந்த பொலீஸ் அதிகாரி என்னைப் பார்த்து "மூன்று நாட்களுக்கு முன் கடற்கரை வாசிகசாலைக்கு முன்னால் வாகன விபத்து ஒன்று நடந்திருக்கிறது. அதனைப் பற்றி நாங்கள் விசாரித்த வேளை எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி அந்தக் காரின் இலக்கத்தை நீர் குறித்து வைத்திருப்பதாக அறிந் தோம். அந்த இலக்கத்தைத் தந்துதவ முடியுமா?" என்று கேட்டார்.

அப்போதுதான் என் பயம் தீர்ந்தது. காற்சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்த டைரியை எடுத்து அந்தக் காரின் இலக்கத்தைக் கூறினேன். அவர் அதைக் குறித்துக்கொண்டு நன்றிசொல்லி வெளியேறினார்.

இது நடந்து ஒரு வாரத்தின் பின் எனது பாடசாலை முகவரிக்கு ஒரு பார்சல் வந்திருந்தது. அதனோடு ஒரு கடிதம் 'நீர் குறிப்பிட்ட இலக்க வாகனச் சாரதியைக் கைது செய்ததன் மூலம் உண்மையான குற்றவாளியைக் கண்டுகொள்ள முடிந்தது. அதற்காகப் பொலீஸ் இலாகாவின் அன்பளிப்பை இத்துடன் இணைத்துள்ளோம்' என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்று, பாடசாலை மட்டத்தில், மாணவர் மட்டத்தில், ஆசிரியர்கள் மட்டத்தில் நான் மிக உயர்ந்த நிலையில் கணிக்கப்பட்டேன். இந்த மகிழ்ச்சியான நிகழ்வை அப்போது நான் கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டுக்கொண்டிருந்த 'அறிவுச் சுடர்' பத்திரிகையில் எழுதினேன்.

2. இடைக்காலம்:

வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல் லாம். கடற்கரை அருகிலிருக்கும் ஒன்றரை நூற் றாண்டு வரலாற்றைக் கொண்ட அந்த வாசிகசாலையே சகலதுமாக எங்களுக்கு அறிவைத் தேட வழிவகுத் தது. மணிவண்ணன், ஜெயகாந்தன், காண்டேகர், டொக்டர் மு.வ போன்றோரின் எழுத்துநடை என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆயினும் பிற்காலத்தில் அவைகூட மனதில் நிற்காமல் போய்விட்டது என்றே கூறவேண்டும்.

3. தற்காலம்:

தற்போது எனக்கென ஒரு தனித்துவத்தை வகித்துக்கொண்டிருக்கிறேன். எதைக் கூற முற்பட் டாலும் அதில் ஒரு நகைச்சுவை பொதிந்த இரட்டை அர்த்தங்கள் கொண்ட கருத்துகளை உள்ளடக்கி ஆக்கங்களைச் செய்துகொண்டிருக்கிறேன்.

- தொடரும் -

- ஆறியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புயர

வரப்புயர என வாழ்த்தினார் ஒளவையார்
அது சுபீட்சத்தின் அடிநாதம்
இக்காலத்தில் 'நெருப்புயர' என வாழ்த்துகிறார்கள்
அதாவது 'எரிபொருள் விலை உயர'
அனைத்துப் பொருட்களும் விலை உயரும்
போக்குவரத்துக் கட்டணம் உயரும்
அதன் மூலம் பொருட்கள் அனைத்தும் விலை ஏறும்
அதனால் வாழ்க்கைச் செலவு உயரும்
மேல்தட்டு வர்க்கத்தினர்
அதைத் தாங்கிக் கொள்வார்கள்
நடுத்தர வர்க்கம் திண்டாடுவார்கள்
கீழ்மட்ட வர்க்கம், நிலைகுலைந்துபோகும்
வர்த்தக நிபுணர்கள் மூளையைக் கசக்கி
கணக்குச் சொல்வார்கள்
இது எட்டாவது முறை – 27 வீதம்
உலக நாடுகளில் இதைவிட அதிகம்
என்பார்கள் – இந்தக் கணக்கெல்லாம்
அன்றாடங் காய்ச்சிகளான
ஏழைகளுக்குப் பயன்படுமா?
அரசியல்வாதிகள் மேடையில் ஏறி
நாட்டைக் கட்டி எழுப்புவதாக
முழங்குவார்கள்
கோடிக்கணக்கான ரூபாய்களில்
அபிவிருத்தித் திட்டங்கள்
மேற்கொள்வதாகக் கூறுவார்கள்
இதெல்லாம் ஏழைகளின் வயிற்றை நிரப்புமா?
உங்கள் அபிவிருத்தித் திட்டங்களை
ஒருபக்கம் ஒதுக்கி வையுங்கள்
அந்தப் பணத்தைக் கொண்டு, ஏழைமக்களின்
பசியைப் போக்குங்கள்
சுவர் இருந்தால்தானே
சித்திரம் வரையலாம்

அருள்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிங்கள பௌத்தர்களும் கலையும்

ஆதிகால சிங்களவர்கள் பாளி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தாலும் குறிப்பாக உயர் வகுப்பினர் சமஸ்கிருதத்தையும் கற்றனர். இதனால் வட இந்தியக் கலைகள் இலங்கையில் 'பிரசித்தி பெறலாயின.

எனவே இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம் குறிப்பிடுவது போன்று விஜயனும் அவனது சகாக்களும் வட இந்தியாவிலிருந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் விஜயனும் அவனது சகாக்களும் தென்னிந்தியப் பெண்களையே மனைவியராகக் கொண்டனர் என்பதிலிருந்து வட இந்தியத் தென்னிந்தியத் தாக்கங்களும் குறிப்பாகக் கலை, இலக்கிய, கலாசார மரபுகளும் ஒன்றிணைந்தன என்பது புலனாகிறது.

அவ்வாறே இலங்கையின் சிகிரியாச் சித்திரங்கள் வட இந்திய அஜந்தாச் சித்திரங்களையும் வட இந்திய தென்னிந்திய சிற்பக் கலைகளையும் ஒத்திருப்பதுடன் வட இந்தியக் கலைகள் இலங்கையிற் தோற்றியிருப்பதையும் கண்டு தெளியலாம். சில பெயர்களும் அவ்வாறே தழுவி நிற்பதைக் காணலாம். உதாரணமாக இந்தியக் கலைஞரான காளிதாசனைப் பின்பற்றி இலங்கைக் கவிஞர் ஒருவரது பெயர் குமாரதாஸ் என இருப்பது போன்ற விடயங்கள் உற்று நோக்கி நுணுகி ஆராயத்தக்கன. இலங்கையின் சிற்பக் கலைகள் பௌத்த பக்தியில் முக்கியம் பெறுகின்றன.

பெரும் பெரும் தூபிகளை அமைத்த துட்டகாமினி, மகாசேனன் போன்ற மன்னர்கள் வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றனர். செங்கற்களும், கருங்கற்களோடு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. தூபிகள் மிகப் பிரமாண்டமானவைகள். இதனை சிலப்பதிகாரம் கூறுகின்ற "சுடு மண் ஓங்கிய நெடு நிலை மாடம் தோறும்" என்ற கூற்றோடு இணைத்துப் பார்க்கலாம்.



இந்தத் தூபிகள் குப்த மன்னர்களுடைய சிற்ப முறைகளோடு ஒத்துக் காணப்படுகின்றன என அறிஞர்கள் கூறுவர் (பேராசிரியர் S. பரணவிதான History of Ceylon பாகம்-01, பக்கம்-401).

இலங்கை சிற்பக் கலைகள் பற்றிய சில படங்கள் பின்னிணைப்பிற் தரப்பட்டுள்ளன. இவை பல்லவக் கலைகளோடும்

தொடர்புபட்டுள்ளன. புத்தரின் உருவச் சிலைகள் கற்களில் செதுக்கப்பட்டு மனங்களை ஈர்க்கக் கூடியன. ஒருமுறை அநுராதபுரத்திற்கு விஜயம் செய்த பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவர்ஹலால் நேரு அவர்கள் அநுராதபுரத்தில் உள்ள ஒரு புராதன பௌத்த சிலையின் முன்னால் தம்மை மறந்து ஒரு மணித்தியாலம் செலவிட்டதாக நாம் அறிகின்றோம். இலங்கையில் உள்ள அதி உயரமான கருங்கற் புத்தர் சிலை 50 அடி உயரமானது. இது தென்னிலங்கையின் வெல்லவாய என்ற இடத்தில் அமைந்துள்ளது.

யானைத் தந்தங்களிலிருந்தும் கலை வண்ணம் மிக்க சிற்பங்களை இலங்கை நூதன சாலையில் காணலாம். புராதன சிங்களவர்களின் மட்பாண்டங்கள் மிக அழகு வாய்ந்தவை. பேர்சிய நாட்டு கண்கவர் கலைவண்ணம் மிக்க மட்பாண்டங்கள் இலங்கையிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து பண்டைய சிங்கள மக்கள் கலைகளோடு கொண்டிருந்த தொடர்பினை ஊகித்தறியலாம்.

இலங்கை சிற்பக் கலைகளில் சந்திர வட்டக்கல் முக்கியம் பெறுகிறது. தமிழக இலக்கியங்களில் சந்திரன் முக்கியமானது, அழகுக்கும் ஆபரணங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சிறப்பான முத்துகள் மன்னார் கடற்கரையில் அகழ்ந்தெடுக்கப் பட்டன என வரலாறுகள் கூறுகின்றன. இலங்கையில் பிரசித்தி பெற்ற பௌத்த யாத்திரை ஸ்தலங்களான களனி, மகியங்கனை, கதிர்காமம், நாகதீபம், கண்டி, அநுராதபுரம், பொலநறுவை, மிகிந்தலை, தம்புள்ள, மின்னேரியா போன்றவை கலை வளம் மிக்க வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டுள்ளன. கண்டிய உற்சவங்களில் முக்கிய இடம்பெறுவது கண்டிய நடனமாகும். இதனை முக்கிய பெரஹராக் காலங்களில் காணலாம். பெரஹரா என்பது பிரகாரம் என்பதன் மரூவுச் சொல்லாகும். ஆரம்பத்தில் கண்ணகியின் உருவச் சிலையை கண்டிய உற்சவத்தில் அல்லது பெரஹராவில்



கொண்டு சென்றனர். சிறந்த முகபடாங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்ட பல யானைகள் முன்தொடர மிகப் பிரசித்தி பெற்ற யானையின் மேல் இந்தச் சிலை கொண்டுவரப்படும். புராதன காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த சீன யாத்திரிகன் பாகியன் (Fahien) என்ற பௌத்த குரு கண்ணகியின் சிலைக்குப் பதிலாக புத்தரின் சிலையை எடுத்துச் செல்லவேண்டும் என்றார். அதற்கு இணங்க இன்று புத்தரின் தந்ததாது எடுத்துச் செல்லப்படுகின்றது.



இலங்கைவாழ் தமிழர்களுடைய கலை வாழ்வு பொதுவாகத் தென்னிந்தியக் கலை வாழ்வுடன் ஒத்ததாகும். தை மாதத்தில் பொங்கலுக்கு முன்னர் வீட்டு முற்றத்தைச் சாணத்தால் மெழுகிக் கோலம் போடுவார்கள். பல்வேறு தங்க வெள்ளி ஆபரணங்களால் தமிழகப் பெண்களைப் போன்று தம்மை அலங்கரித்துக் கொள்வார்கள். நெற்றியில் திலகமிடுவது உளவியல் சார்ந்ததாயினும் இன்று பொதுவாக அழகைப் பிரதிபலிப்பதற்காக அமைகிறது. இலக்கியங்களிலும் இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும் பெண்பாலார் வருணிக்கப்படுவது போன்று கொடியிடையுடன் வேறு அங்கங்களும் சிறப்பாக இருக்க கலை அம்சங்களோடு மிளிர இலங்கைவாழ் மக்கள் எடுக்கும் முயற்சிகள் பலவாகும். இதனை மிகச் சுருக்கமாக பண்டைய முதுமொழி மூலம் "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு" எனக் குறிப்பிட்டிருந்தார்கள் போலும்.

இலங்கையில் இந்துப் பேராலயங்கள் பல விளங்குகின்றன. மன்னார் திருக்கேதீஸ்வரம், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் போன்ற இடங்களிலும் அர்த்த புஷ்டியுடன் கூடிய கலை அம்சங்கள் நிறைந்த சிற்பங்கள், சிலைகள் என்பன மனங்களைக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் ஒன்று வேண்டுவேன்



இறைவா நான் உம்பாதம் சரணடையும் முன்னர்
ஊதாரிப்பிள்ளை போல ஊனியல்பில் திளைத்து
வழிதவறிய ஆடாகி எங்கெங்கோ அலைந்து
திரும்பி நான் பார்க்கின்றேன் என்ன சுகம் கண்டேன்

செல்வசுகம் பெரிதென்று உமை மறந்தேன் அன்று
ஆனால், நீர் வெறுக்கவில்லை காத்திருந்தீர் எனக்காய்
மகிழ்வென்று திரிந்தேனே மனம் போன போக்கில்
இத்தனை நாள் இழந்தேனே வாழ்நாளில் பாதி

நற்கருணை வடிவில் உமை கண்டுணர்ந்த பின்னே
நற்கருணை நாதா மனம் பூவாய் மலர்கிறதே
உள்ளம் உவகை கொள்ளுதையா கூற வார்த்தையில்லை
உயிர் பிரியும்வரை நானும் உமைவிட்டுப் பிரியா
வரமொன்று தாருமையா ஏந்துகின்றேன் தயவாய்

o தெல்மா


## கடுகுக் கதை 6 மழை

அருள்பணி ஆரோக்கியம் அடிகளார் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு குழம்பிப்போய் இருந்தார். என்ன பிரச்சினை அவருக்கு....?

பங்குப் பணித்தளத்தைப் பொறுத்தமட்டில் அவர் திறமான நிர்வாகி!

கட்டிட ஒப்பந்தக்காரர் பீற்றர் என்பவர், குருவானவரிடம் தம் கருத்துக்காக பலிப்பூசைக்குப் பணம் கட்டிவிட்டுச் சென்றிருந்தார். அடிக்கடி மழை பெய்வதால் கட்டிட வேலைகள் அப்படியே நிற்பதாகவும், மழை நிற்கவேண்டும் என்ற கருத்திற்காக பூசை வைக்கும்படியும் சுவாமியிடம் கேட்டிருந்தார்.

அவர் சென்றபின்னர் யோசப் என்பவரும் வந்து பீற்றர் கேட்ட அதே திகதியில் பூசைக்குக் காசு கட்டியிருந்தார். அவர் போன பிறகுதான் சுவாமி என்வலப்பைப் பிரித்து பூசைக்கான கருத்தை வாசித்தார். 'வயலுக்குப் போதியளவு மழை இல்லாததால் நல்ல மழை பெய்ய மன்றாடுங்கள்'



ஆரோக்கியம் சுவாமிக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. – பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழ் தொடர்ச்சி...

## சிறிய வசனங்கள் – பெரிய சம்பவங்கள்

சிலருடைய எழுத்துகளை வாசிக்கும்போது தலை சுற்றும். சிலவேலை ஒரு பந்தியே ஒரு வசனமாக இருக்கும். கமா என்ற கால்தரிப்பைப் போட்டுப் போட்டு எழுதிக்கொண்டே போவார்கள். அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதே பெரிய பாடாகிவிடும். ஜெயந்தன் அடிகளாரின் வசனங்கள் வாசகர்களைக் கவருகின்ற வகையில் சின்னஞ்சிறு வசனங்களாகவுள்ளன. ஒரு பந்தியில் விபரிக்கவேண்டிய ஒரு பெரிய சம்பவத்தை ஒரு வசனத்திற்குள் அடக்கி விடும் சாமர்த்தியமான எழுத்துகள் அவருடையன.

'தென்திசை நோக்கி துறவியாக' என்ற 34வது கதையில் தனது மாமா வீட்டுக்குப் போனதையும் அங்கு நிகழ்ந்ததையும் சிறிய வசனங்களில் மிக அழகாகச் சொல்கிறார். "*வீடு போய்ச் சேர்ந்தோம், விபரம் சொன்னோம், விருந்துண்டோம், ஆறுதலாகக் கழிந்தது பிற்பகல்.*" சிப்பாய் ஒருவன் தம்மை விசாரித்த நிகழ்ச்சியைச் சொல்லவரும் ஜெயந்தன் இப்படிச் சொல்கிறார். "*மூவரும் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள். விசாரித்தான், விபரம் சொன்னோம், விளங்கிக்கொண்டான், ஆனால் விட்டபாடில்லை.*" "*நல்ல களைப்பு, நல்ல குளிப்பு, நல்ல உணவு, நல்ல உறக்கம்*" "*தொபுக் என விழுந்தேன், நொந்தேன், நசிந்தேன், நனைந்தேன், சுதாரித்து எழுந்து இருட்டில் நடந்தேன்.*"

### நகைச்சுவை, நக்கல், நையாண்டி

எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்கள் சமூகத்தை விமர்சனக் கண்கொண்டு பார்ப்பவர்கள். "பிறர் ஈனநிலை கண்டு துள்ளுகின்ற" மனம் படைத்தவர்கள். அவர்கள் கண்ணுறும் சமூக அநீதிகளைக் கண்டு கொதித்தெழுவர். சிலவேளை அந்த மன உழைச்சல்களை தமது எழுத்துகளில் திட்டித்தீர்த்து வெளிப்படுத்துபவர்களும் உண்டு. அவற்றை நகைச்சுவையாக, நக்கலாக, நையாண்டியாக வெளிப்படுத்துபவர்களும் உண்டு.

இன்றைய விலைவாசி உயர்வை ஜெயந்தன் நகைச்சுவையாக இப்படிச் சொல்கிறார். "*அந்நாட்களில் பாண் வாங்குதல் வெட்கமென அதை மறைத்துக் கொண்டுவருவோம். இப்பொழுதோ விலையைப் பார்த்தால் 'நாங்கள் பாண் சாப்பிடுகிறோம்' என மார்தட்டலாம் போலும்.*" தாம் சாப்பிட்ட உணவின் சுகாதாரம் எப்படி இருந்தது என்பதைக் கூறவரும் ஜெயந்தன் இப்படிக் கூறுகின்றார். "*மணித்தியாலங்களின் பின் அப்பா வந்து சேர்ந்தார். இதுதான் இருக்கிறது எனப் பொதியை அவிழ்த்தார். கருங்கபில நிறத்தில் வாய்ப்பன்கள் சில. வண்டுகளை அகற்றி எஞ்சியதைச் சாப்பிட்டோம்.*" தன் சுகவீனத்திற்கு மருந்து எடுத்த கதையைக் கூறும் ஜெயந்தன் இப்படிக் கூறுகின்றார். "*எனக்கு இருந்த தலைவலி உபாதையை பரியாரியிடம் கூற, அவரும் ஏதேதோ மருந்து மாத்திரைகளைத் தந்திருந்தார். மருந்தும் தீர்ந்தது. பணமும் தீர்ந்தது. பரியாரியும் தலைவலியும் பரிச்சயமாகிப் போனார்கள்.*"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புகைத்தல் கூடாது அறிவித்தல் திரையில் தெரிந்ததும் அரங்கம் நிறைந்திருந்த பீடிப்புகை திரை நோக்கி பாய்ச்சப்படுகின்ற ஒளிக்கீற்றில் நன்றாகத் தெரிந்தது." "அனேக வாரங்களுக்குப் பின் மீன் கிடைத்தது, ஏதோ விண்மீனையே வாங்கிவிட்டது போல் சில முள் மீன்களை வாங்கிக்கொண்டு விரைந்தேன்." என்றவாறு அவருடைய கிண்டல்கள் அமைகின்றன.

## புரட்சியாக – புதுமையாகச் சொல்லும் பாணி

பாரதியாரை புரட்சிக் கவி என்கிறோமே. பாரதி செய்த புதுமை என்ன? "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றார் பாரதியார். தேன் வந்து நாவினில்தான் பாயும். அது எப்படிக் காதினில் பாயும்? ஆனால் பாரதியார் புதுமையாகச் சொன்னார். இதுதான் பாரதி செய்த புதுமை! அதனால்தான் பாரதியைப் புரட்சிக் கவி என்கிறோம். 'தாண்டிக் குளம்' என்ற கதையில் பாரதியாரைப்போல் புதுமையான முறையில் ஜெயந்தன் வார்த்தைகளைக் கையாள்கின்றார். "நாலு வருடங்களாய்க் காணாத அந்த இரும்பு அதிசயத்தை - புகையிரதத்தை கண்களால் நன்றாகச் சுவைத்தோம். அதன் ஒலிப்பான் காதில் தேனாய் விழுந்தது."

## கருத்தைக் கவருகின்ற எழுத்து நடை

ஜெயந்தன் அடிகளாரின் எழுத்துநடை கண்ணையும் கருத்தையும் கவருவதாய் உள்ளது. எதுகை மோனையில் பல வார்த்தைகளை அமைத்திருப்பது அவருக்கே உரிய பாணி. பல தலைப்புகளே எதுகை மோனையில் போடப்பட்டுள்ளன. 19வது கதை 'கொடியும் தடியும்' 26வது கதை 'ஹெலியும் கிலியும்' 'வெண்ணை' என்ற 36வது கதையில் பக்கம் 71ல் "பாரம் பிரச்சினையாக இருக்கவில்லை நேரமே பிரச்சினையாக இருந்தது" என்கிறார். இரவு வேளையையும் கடலின் அமைதியையும் கூற வருகின்றவர் "சில்லென்ற இரவு, சீரான கடல்" என்கிறார். 'அகதிகள் கவனத்திற்கு' என்ற 13வது கதையில், "ஏராளமாக அலைந்தேன், தாராளமாகக் கற்றேன்" என்கிறார்.

'கடல் கடந்த சயிக்கிள்' என்ற 28வது கதையில் "நடுங்கியபடியே உழக்கினோம், உழக்கியபடியே நடுங்கினோம். எட்டத்தில் ஓரிரு வெளிச்சங்கள் கண்டு ஆறுதலடைந்தோம். ஒருவாறாக மடுப்பதி வந்தடைந்தோம். உற்சாகம் கரைபுரண்டது, உயிர் மட்டும் கரைந்திருந்தது" என்கிறார். 'வாந்தியுடன் ஒரு பயணம்' என்ற 4வது கதையில் வாந்தி எடுக்கும் நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் பாங்கு சுவாரஷ்யமானது. "கடைசியில் பதம்பார்த்த பச்சை மாங்காய், முன்பு சாப்பிட்ட ரீ பணிஸ், காலையில் அருந்திய வெறுந்தேனீர் எல்லாம் வரிசைக் கிரமத்தில் வெளிநடப்புச் செய்தன" என்கிறார்.

## நியாயமான கேள்விகள்

ஒரு சில கதைகளின் இறுதியில் சமூக அக்கறையுடன் கூடிய நியாயமான சில கேள்விகளை அடிகளார் முன்வைக்கிறார். "நாலாயிரம் வருடங்களாக நீராவியைப் பயன்படுத்துகின்றோம் புட்டவிப்பதற்கு. நாமும் புகையிரதத்தை ஓட்டுவது எப்போது?" என்ற அவரின் கேள்வி ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.

குருமடத்தில் தனக்கு வழங்கப்பட்ட 'றாக்கிங்' என்ற 'வன்முறைப் பகிடிவதை'யைப் பற்றிச் சொல்ல வருகின்றபோது, இன்றைய கல்விச் சமூகங்களில் இடம்பெறும் றாக்கிங் என்ற வன்முறைப் பகிடிவதை குறித்து இப்படிக் கேள்வி கேட்கின்றார். "தெற்காசியாவில் மாத்திரம்தானே வன்முறைப் பகிடிவதை. வளர்ந்த நாட்டுக் கல்விக்கூடங்களில் பகிடிவதை இல்லையே. அங்கே நட்பு ஏற்படுவதே இல்லையோ?" நம்மத்தியில் உள்ள

## ஐந்தும் ஐம்பதும்

ஐந்து ரூபாய் இனாம் கொடுப்பது நல்லது; ஆனால் ஐம்பது ரூபாய் கடன் கொடுப்பது கெட்டது. கடன் கொடுப்பது எதையெல்லாமோ இழக்கச் செய்கிறது. ஏனென்றால் கடன் திரும்ப வரும்போது தான் அதை நான் பெற்றுக்கொண்டேன் என உறுதியாகச் சொல்ல முடியும். அடுத்து கடன் பெற்றவரின் உறவைத் துண்டிக்கிறது கடன். ஏனெனில் கடன் பெற்றவர் நம்மைக் கண்டு ஒதுங்க முயற்சிக்கின்றார். எனவே,

ஷேக்ஸ்பியரின் அறிவுரை "Neither be a lender nor a borrower" கடன் கொடுப்பவருக்கும் கடன் பெறுபவருக்கும்சிறந்த அறிவுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடநம்பிக்கைகளை இப்படிச் சாடுகின்றார். "*அவன் செவ்வாய்த் தேசத்தில் குடியிருக்க முண்டியடிக்கும் யுகத்தில் நாம் மாத்திரம் இங்கு செவ்வாய்த் தோசத்தில் சோம்பிக் கிடக்கின்றோமே?*" இப்படியாகச் சமூகத்தைக் கேள்வி கேட்கும் சமூகப் பொறுப் புணர்வு மிக்க எழுத்தாளராக அடிகளார் தன்னை இனங்காட்டுகின்றார்.

நூலின் அமைப்பு கச்சிதமாக இருக்கின்றது. நூலின் பக்கங்களை அதிகரிக்கச் செய்வதற்காக சிலர் வேண்டுமென்றே பக்கங்களை அதிகமாக் குவார்கள். இந்நூலில் தேவையில்லாமல் எந்த இடைவெளியும் இல்லை. இது இந்நூலின் இன்னு மொரு சிறப்பு.

### கவனிக்கப்படவேண்டிய சில விடயங்கள்

இறுதியாக இந்நூலில் அடிகளார் கவனத்திற் கொண்டிருக்கவேண்டிய சில விடயங்களை சுட்டிக்காட்ட முனைகின்றேன். நூலின் எழுத்துநடை நவீன நடையாக 'புதுமை'யாக அமைக்கப்பட்டி ருக்கின்ற ஒரு சூழ்நிலையில் நூலின் அட்டையையும் இன்றைய நவீன ஓவியமாக வரைந்து சமகால பயண அனுபவத்தை, பயண அவஸ்தைகளை வெளிக் கொணரும் வகையில் ஒரு 'புதுமை'யைப் புகுத்தியி ருக்கலாம். ஒவ்வொரு கதைகளின் தலைப்பையும் மிகவும் சுவாரஷ்யமாக, கவர்ச்சியாக, ஆர்வத்தைத் தூண்டுபவையாக போட்டிருக்கும் இவர் ஏன் நூலின் தலைப்பையும் இன்னும் கவர்ச்சியாக, ஆர்வத்தைத் தூண்டுவதாகப் போட்டிருக்கக்கூடாது? என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

ஜெயந்தன் எதையும் வித்தியாசமாகவே சிந்திப்பவர், செய்பவர், சொல்பவர். அந்த 'வித்தியாசம்' இந்த நூலாக்க முயற்சியில் குறிப்பாக உள்ளடக் கத்தில் தெரிகிறது. ஆனால் அட்டைப் படம் மற்றும் நூலின் தலைப்பு ஆகியவற்றில் அந்த வித்தியாசம் இல்லாமல்போனது சற்று ஏமாற்றத்தைத் தருவது போல் உள்ளது.

ஜெயந்தன் அடிகளாரின் இந்நூல் வெளியீடு ஒரு கன்னி முயற்சி. புனைகதை இலக்கியத்தில் அவர் காலடி பதிக்க பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இந்நூல் ஒரு தூண்டுதலாக, ஒரு ஆரம்பமாக அமையவேண்டும்.

# 146 மொழிகள் கற்றவர்



டென்மார்க் பேராசிரியரான கிறிஸ்டியன் ராஸ்க் 1832ம் ஆண்டுவரை 45 வருடமே வாழ்ந்தவர். அவருக்குத் தெரிந்த மொழிகள் 146.

எந்த மொழியிலும் நல்ல தேர்ச்சி இருந் தால்தான் அம்மொழியில் அகராதியைத் தொகுக்க முடியும். இவர் 25க்கு மேற்பட்ட மொழிகளில் அகராதிகளைத் தொகுத்திருக்கின்றார். பல பூர்வ குடிகளின் மொழிகளையும் அவர் அறிந்திருந்தார்.

இதுவரை யாருமே சாதித்திராததை செய்து காட்டிய அவர் பிறவி மேதை என்றே சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் தவிர்த்தல் ஒரு தெய்வீகக் குணம்

"சீறு, கடிக்காதே!" என்று ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு பாம்பு பற்றி கதை சொல்வது வழக்கம். இந்தக் கதையில் ஆழ்ந்த கருத்து அடங்கியுள்ளது. கோபம் தேவையில்லை. ஆனால் தேவை ஏற்படும்போது சில சமயங்களில் கோபம் கொண்டவர் போல் நடிக்கலாம். இதனால் மற்றவர்கள் பயப்படுவார்களே தவிர, அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

மற்றவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டு, கோபப்படுவதைப் போன்ற நடிப்பு தேவைப் படலாம். ஆனால் உண்மையிலேயே கோபப்பட்டு மற்றவர்களுக்கு நாம் தொல்லை கொடுக்கக் கூடாது. கோபம் என்ற தன்மை நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்குமானால் அதனால் எந்தத் தீமையும் விளையாது. ஆனால் கோபத்தின் ஆக்கிரமிப்புக்குட்பட்டு நாம் செயல்படும்போது, தீமை செய்யும் மனநிலை நமக்கு ஏற்பட்டுவிடும்.



கோபத்தாலோ, தண்டனையினாலோ எவரையும் திருத்திவிட முடியாது. பொறுமை, அன்பு ஆகியவற்றின் மூலமே மற்றவர்களைத் திருத்த முடியும். இதைத் தான் மத போதகர்களும், மகான்களும் போதித்தார்கள்.

அன்புடன் இருப்பது, இனிமையாகப் பழகுவது, நல்ல வார்த்தைகளைப் பேசுவது, மங்கள எண்ணங்களைக் கொண்டிருப்பது, மற்றவர்களின் கஷ்டங்களைத் தீர்க்க முடிந்த அளவுக்கு உதவி செய்வது ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ளும்போது கோபம் மெல்ல மெல்ல நம்மிடம் இருந்து விலகிச் செல்ல ஆரம்பித்துவிடும்.

இனிமையாகப் பழகுவதற்கு நமக்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனாலும் பொல்லாத சொற்களை வாரி வழங்கிவிடுகிறோம். சுடு சொற்களைத் தாராளமாகப் பயன்படுத்துகிறோம். சொற்களுக்கு மிகுந்த வலிமையுண்டு. நல்ல சொற்களின் வலிமை மற்றவர்களிடத்தில் நமக்குச் சாதகமான நல்ல எண்ணங்களைத் தோற்றுவிக்கும். தீய சொற்கள் நமக்குப் பாதகமான உணர்ச்சிகளைப் பிறரிடம் ஏற்படுத்தும். கோபத்தினால் விளையும் சுடுசொற்கள், பாதிக்கப்பட்டவரின் மனதில் நிரந்தரமான காயத்தை ஏற்படுத்திவிடும். சொற்களை நிதானித்துப் பயன்படுத்தத் தெரியாவிட்டால் ஏராளமான விரோதிகளை நாம் உருவாக்கிக்கொள்ள நேரிடும். இது பல்வேறு சங்கடங்களைத் தோற்றுவிக்கும். இதைத் தவிர்க்க வாய்ப்பிருக்கும்போது அதைப் பயன்படுத்திக் கொள்ள நாம் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்.

நமக்கு ஏற்படும் பல கஷ்டங்களுக்கும் கோபமே தாயாக இருக்கிறது. கோபம் என்ற தாய் பெற்றெடுத்த குழந்தைகள்தான் பொல்லாத செயல்கள். சொற்களைக் கொட்டிவிடலாம், மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை அள்ள முடியாது.


கோபத்தைப் பொறுக்கும் மனப்பான்மையைப் பெற்றிருப்பது, கோபம் கொள்வதைவிட உயர்ந்தது. பொறுத்துக்கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துப் பழக்கமாக்கிக் கொண்டால் நாளடைவில் அது சுலபமாகிவிடும். அதன் பின்னர் பொறுத்துக்கொள்வதில் சிரமம் ஏற்படாது. அந்த நிலையில், ஒரு வேளை கோபம் உண்டானால் அதை எளிதில் அடக்கிவிட முடியும். அதனால் விபரீதம் ஏற்படாது.

பொறுத்துக்கொள்ளும் மனப்பான்மையே பொறுமையாகும். இது ஏற்படும்போது அறிவு பூரணத்துவம் பெறுகிறது. கோபம் அறிவின்முன் மண்டியிட்டுச் சரணடையும் இயல்புடையது. மன்னிக்கும் மனப்பான்மை பயிற்சியால் ஏற்படும்.

நன்மையை நாடி நன்மையின் வழியில் செல்லும்போது நன்மையே துணையாக நிற்கும். தீமை வழியில் சென்றால் தீமைதான் துணையாக வரும்.

அன்போடு பேசுங்கள். கடின சுபாவமுடையோரில் நீங்களும் ஒருவராக ஆகாதீர்கள். கோபம் உங்கள் நற்பண்புகளையும், நன்மைகளையும் அழித்துவிடும்.

– திருமதி. சங்கர் சாந்தி –



# மிகப் பெரிய ஒலிம்பிக் அரங்கம்

இவ்வாண்டு சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுக்காக மிகப் பெரிய ஆயத்தங்களைச் சீனா செய்து வருகிறது. உலகமே ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது. உலக ஊடகங்களில் எல்லாம் ஒலிம்பிக் விளையாட்டின் வரலாறு பற்றிய செய்திகள் நிறைய வெளிவந்துகொண்டிருக்கின்றன.

2000ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்காக கட்டப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டு அரங்கம்தான் இதுவரை கட்டப்பட்ட ஒலிம்பிக் அரங்கங்களில் மிகப் பெரியது. இதில் 110,000 பேர்வரை அமரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
31- 08 - 2008




# விவிலியம் கற்போம் - 68

(எண்ணிக்கை 6:1–16)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: இஸ்ரயேல் மக்களிடம் சொல்; ஓர் ஆணோ பெண்ணோ தன்னை ஆண்டவருக்குத் தனிப்படுத்திச் சிறப்பான நாசீர் பொருத்தனை செய்து ஆண்டவருக்குத் தன்னை ....................................., திராட்சை இரசம், மது விலக்க வேண்டும்; அவற்றின் காடியை அருந்தக் கூடாது. திராட்சையிலிருந்து கிடைக்கும் எதையும் ............................................ கூடாது. பொருத்தனைக் காலம் முழுவதும் சவரக் கத்தி அவன் தலையில் படக்கூடாது; தூய்மையுடன் இருப்பான்; தலைமுடியை நீளமாக வளர விடுவான். பிணத்தருகே அவன் போகக் கூடாது. ................................, தாய், சகோதரன், சகோதரி இறந்தால் கூட அவர்களுக்காகத் தன்னை தீட்டுப்படுத்தக் கூடாது; எவரேனும் திடீரென அவன் அருகே இறந்து ........................................... அவன் தலையைத் தீட்டுப்படுத்தினால் தூய்மைப்படுத்தும் நாளில் அவன் தன் தலையைச் சிரைத்துக்கொள்ள வேண்டும்; ஏழாம் நாளில் அவ்வாறு செய்துகொள்வான். எட்டாம் நாளில் இரு காட்டுப் புறாக்களையோ, இரு ......................................... குஞ்சுகளையோ சந்திப்புக்கூடார நுழைவாயிலுக்குக் குருவிடம் கொண்டுவர வேண்டும். குரு ஒன்றைப் பாவம் போக்கும் பலியாகவும், மற்றதை எரிபலியாகவும் ஒப்புக்கொடுப்பார்; பிணத்தை முன்னிட்டு அவன் ............................................... செய்துள்ளதால், அவனுக்காகக் கறை நீக்கம் செய்வார்; அவன் தலையையும் புனிதப்படுத்துவார். அவன் பொருத்தனை செய்த காலத்திற்காக மீண்டும் தன்னை ஆண்டவருக்கு அர்ப்பணிப்பான். குற்ற நீக்கப் பலிக்காக .............................................. ஆட்டுக்கிடாய் ஒன்றைக் கொண்டுவருவான்; அவன் அர்ப்பண நிலை தீட்டுப்பட்டதால் கடந்துவிட்ட காலம் கணக்கில் வராது. அர்ப்பண காலம் நிறைவேறும்போது நாசீருக்கான சட்டம் இதுவே; ............................................ நுழைவாயிலுக்குக் கொண்டு வரப்படுவான்; ஆண்டவருக்கு அவன் கொண்டுவரும் நேர்ச்சைப் பொருள்: பலிக்காகப் பழுதற்ற ஓராண்டு ............................................... ஒன்று, பாவநீக்கப் பலிக்காக ஓராண்டு ஆட்டுக்குட்டி ஒன்று, நல்லுறவுப் பலிக்காகப் பழுதற்ற ஆட்டுக்கிடாய் ஒன்று, புளிப்பற்ற அப்பம் ஒரு கூடை, எண்ணெயில் மெல்லிய மாவைப் பிசைந்து செய்த ........................................................., எண்ணெய் தடவி புளிப்பற்ற மாவால் செய்த அடைகள், அவற்றின் உணவுப்படையல், நீர்மப் படையல் ஆகியவை. குரு அவற்றை ஆண்டவர் முன் கொண்டுவந்து பாவம் போக்கும் பலியையும் எரிபலியையும் நிறைவேற்றுவார்.

**விடைகள் : மாடப்புறா, ஓராண்டு, பாவம், நெய்யப்பங்கள், செம்மறிக்கிடாய், சந்திப்புக் கூடாரத்தின், அர்ப்பணித்தால், தன் தந்தை, புனிதப்படுத்தப்பட்ட, உண்ண.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 68

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. ஒலிம்பிக் உலகப் போட்டி இறுதியாக நடைபெற்ற நாடு
   (சீனா, அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தீவுகள்)

2. மனிதனின் முதுகுத் தண்டில் உள்ள எலும்புகள்
   (33, 36, 38)

3. கற்றது கையளவு கல்லாதது....................?
   (கடலளவு, உலகளவு, மலையளவு)

4. பொற்கைப் பாண்டியன் என அழைக்கப்பட்டவன்
   (சுந்தர பாண்டியன், வீர பாண்டியன், குலசேகர பாண்டியன்)

5. அண்மையில் இலங்கையில் இரண்டாகப் பிரிந்த இடதுசாரிக் கட்சி
   (கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜிக் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன)

6. 'பாடாப்பாவை' என்பதில் உள்ள பாடா என்பது
   (பெயரெச்சம், வினையெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 68
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 66 விடைகள்

சந்திப்புக்கூடார, வெள்ளாட்டுத் தோல், ஆரோன், இத்தாமரின், மெராரியர், கோகாத்தியர், மோசேயும், ஆண்டவர், இஸ்ரயேல், அவர்களை

## அறிவை வளர்ப்போம் - 66 விடைகள்

1) லண்டன்
2) நாலாயிர திவ்விய பிரபந்தம்
3) சோயாபீன்ஸ்
4) கரம்பன்
5) பெரிய மீன்
6) வினைத்தொகை

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- றெ. பௌஸ்ரீனா
  திருக்குடும்பக் கன்னியர் மடம்
  பள்ளிமுனை, மன்னார்
- M. நிலுசினி
  மரியநாயகம் மகளிர் இல்லம்
  மாவடிவேம்பு - 01

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 18 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  மெலோனா றாகல்
  பனிச்சையடி
  சத்துருக்கொண்டான்
  மட்டக்களப்பு
- **இரண்டாம் பரிசு** - 200/=
  டெல்மா நட்டாஷாறூப்
  இல - 13, காந்தி நகர்
  பாலையூற்று
  திருகோணமலை
- **3ம் பரிசு** - 100/=
  து. ஜெரோம்-
  -ஒசில்டன்
  இல-727
  கிளப் வீதி
  தெல்தோட்டை, கண்டி

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

# ஆகஸ்ட் - 2008

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.50 மணி**

| | | |
|---|---|---|
| நாள்: | 02, 03, 04, 05 | - D. பெஞ்சமின் |
| | 06, 07, 08 | - A. G. இராஜேந்திரம் |
| | 16, 17, 18, 19 | - J. டேவிட் |
| | 20, 21, 22 | - J. பத்திநாதன் |

**புதிய உலகம் - மாலை 5.00 மணி**

நாள்:- 10, 24

வழிபாடு, செய்திவட்டம், வேரைத் தேடி, சிறுகதை,
குறுநாடகம், சிந்தனை உரை, பாடல்கள் இன்னும்...

**சிறுவர் உலகம் - மாலை 5.15 மணி**

நாள்:- 12, 26

கதையும் கருத்தும், கவிதை, பாடல்கள் இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு:
மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org